பக்கங்கள்: 13ஸ

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 09 சனிக்கிழமை 25.11.2023 கதிர் 379

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க ஒப்பமிடவில்லை

## ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் திட்டவட்டம்

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான ஒப்பந்தத்தில் நான் கைச்சாத்திடவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நவம்பர் 22 சுமந்திரன் ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும் வகையில் விசேட கூற்றொன்றை நேற்று முன்வைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான ஒப்பந்தத்தில் நான்** ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

நவம்பர் 23 எனது இந்தப் பத்தியில் வன்முறை மற்றும் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிய அரசியல் தலைவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு அஞ்சலி செலுத்துகின்றனர் என்பதில் உள்ள முரண்நிலை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அதில் விடுதலைப் புலிகள் இனச் சுத்திகரிப்பில் ஈடுபட்டார்கள் என்று கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய தனது உரையில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

"நாடாளுமன்றத்தில் குழு நிலை விவாதத்தில் பேசிய தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் ☞ 2

## அமெ. தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்த மூன்று பேர் நேற்று கைது

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மின்சாரப் பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மக்கள் போராட்டக்கள இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு முன்னபாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பலஸ்தீனில் முன்னெடுக்கப்படும் அமெரிக்க, இஸ்ரேல் கூட்டு ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனின் உருவப்படத்துக்கு ☞ 2

## வட்டுக்கோட்டை இளைஞனின் இறப்பு; பொலிஸாரைக் கைது செய்ய பணிப்பு

### யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் நேற்று நடவடிக்கை



வட்டுக்கோட்டை இளைஞனின் இறப்புக்குக் காரணமாக இருக்கக்கூடியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் பொலிஸாரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வட்டுக்கோட்டை, சித்தன்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா ☞ 8

## சஜித்தின் கருத்துக்களினால் சபையில் கடும் வாக்குவாதம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையை அடுத்து நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதசாவின் கூற்றுக்களால் சபையில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு பதிலளிக்கும் வகையில் உரையாற்றியதன் பின்னர் வெளியேறிச் சென்றார். இச்சமயத்தில் எழுந்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, "ஜனாதிபதி அவர்களே, ஜனாதிபதி ☞ 2

## கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக வழக்கை விசாரணைக்கு ஏற்றது நீதிமன்று

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தொடர்பான வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதாக உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது. இதன் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு முறையான அறிவித்தல்களை வழங்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

34 ஆண்டுகளாக இயங்கிவரும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தொடர்ந்தும் பிரதேச செயலகமாகவே இயங்க ☞ 8

## அரசமைப்பு பேரவை குறித்து தெரிவுக்குழு அமைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டா?

### சபநாயகரிடம் எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி

அரசமைப்புபேரவையின் செயற்பாடுகள் தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதற்கு ஜனாதிபதிக்கு முடியுமா என்பதையும் அரசமைப்புபேரவையின் இறுதி நியமனம் இடம்பெறாமல் இருப்பது தொடர்பாகவும் சபாநயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு தெளிவுபடுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரைக் கேட்டக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சபைக்கு வந்து அரசமைப்பு பேரவை தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் சுட்டிக்காட்டி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித் ☞ 9

## 4 மின் உற்பத்தித் திட்டங்கள் வடக்கு கிழக்கில் தொடக்கம்

### அடுத்த மாதம் முதல் பணிகள்

வடக்கு கிழக்கில் 4 திட்டங்கள் உட்பட 6 மின் உற்பத்தித் திட்டங்கள் அடுத்த மாதம் தொடங்கப்படும் என்று மின்சார மற்றும் வலுச் சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டம், கிளிநொச்சி. பூநகரி மின்னுற்பத்தித் திட்டம், சம்பூர் அனல் மின்நிலையத் திட்டம், மட்டக்களப்பு ஒட்டமாவடி மின் உற்பத்தித் திட்டம் ஆகய திட்டங்கள் வடக்கு கிழக்கில் தொடங்கப்படவுள்ளன என்று அவர் அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத்திட்ட விவாத்தின் ஒரு பகுதியாக மின் சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சு ஆகிய வற்றுக்கான செலவுத் ☞ 8

## அங்கத்துவம் இல்லாத அமைச்சு ஒதுக்கீடு மீதும் விவாதம் நடக்கும்

### சபாநாயகர் நேற்று அறிவிப்பு

அமைச்சரவை அங்கத்துவம் அல்லாத பெருந்தோட்டத்தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சின் செலவுத் தலைப்பும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றையதினம் ஆரம்பமானபோது, சபாநாயகர் அறிவித்தல் நேரத்தின்போது, 2024 வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது 2023 டிசெம்பர் 09 ஆம் திகதி சனிக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கமத்தொழில் அமைச்சு மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு என்பவற்றின் ☞ 8

## அடுத்த தவணையின் ஆரம்பத்தில் 4,672 அதிபர்கள் பொறுப்பேற்பர்

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவிப்பு

தற்போது 4,672 அதிபர்களுக்கு புதிய நியமணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வரவுள்ள பாடசாலை விடுமுறையின் பின்னர், இவர்கள் பாடசாலைகளில் நியமனம் பெறுவார்கள் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரசிரி ரத்நாயக்க எழுப்பிய வாய்மூல கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தரர்.

அவர் அளித்த பதிலில் மேலும் ☞ 9

## மட்டு. தரவை மாவீரர் நினைவுத் தூபி இடித்தழிப்பிற்குக் கடும் கண்டனம்

### சபையில் பதிவு செய்தார் சாணக்கியன் எம்.பி.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டுவந்த நினைவு தூபிகள் இடித்து அகற்றப்பட்டத்தை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன் என தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டில் மக்களின் வரிகளை பெற்றுக்கொண்டு மாளிகைகளும் கோபுரங்களும் கட்டிவைத்துள்ள இராணுவ தளபதிகள் மற்றும் இராணுவ மேலதிகாரிகளின் பாதுகாப்புக்கென பெருமளவு நிதி செலவிடப்படுகின்றது.

இருப்பினும் இராணுவ சிப்பாய்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் போர் முடிந்த பின்னும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவினால் மேலதிகமாக இணைக்கப்பட்டு அவர்கள் மேசன், தச்சுத்தொழில் மற்றும் கூலிவேலைகளுக்காக அமர்த்தப்பட்டார்கள்.

இலங்கை மக்கள் அவர்களின் வேதனத்துக்கும் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மக்களுக்காகப் போரிட்டு மடிந்தவர்களைத் தான் நினைவு கூருகின்றார் என்று தெரிவித்தார். விடுதலைப் புலிகள் அமைப்பு வடக்கில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமையை இனச்சுத்திகரிப்புக்கு ஒப்பிட முடியும் என்பது உட்படப் புலிகள் குறித்த பல்வேறு சர்ச்சைகளிற்குள் சிக்கிக்கொண்டவர் சுமந்திரன். அதன் விளைவாக இப்போதும் பலரது எதிர்ப்பையும்வெறுப்பையும் எதிர்கொண்டு வருபவர். அவரும் இன்று நாடாளுமன்றத்திலேயே புலிகளை நினைவுகூர்ந்திருப்பது நல்ல மாற்றம்தானே" என்று நான் தெரிவித்திருந்தேன்.

அது தொடர்பில் நேற்று அழைப்பெடுத்துப்பேசியசுமந்திரன் ஒ-ரு விளக்கத்தைச் சொன்னார். நான் இந்த வருடம் மட்டும் அல்ல, மக்களுக்காக உயிர் நீத்த போராளிகளை ஒவ்வொரு வருடமும் நாடாளுமன்றத்தில் எனது உரையில் நினைவுகூர்ந்து வந்திருக்கின்றேன். அதனால் நான் மாற்றமடைந்திருக்கின்றேன்என்று கூறுவதுமுற்றிலும்பொருத்தமற்றது என்று தெரிவித்தார்.

''நான் யாரையும் பயங்கரவாதிகள் என்றோ தியாகிகள், புனிதர்கள் என்றோ அடையாளப்படுத்தியதில்லை. அவர்களின் செயல்கள் குறித்த விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றேன். அவர்களின் செயல்களுக்காக அவர்களைக் குறிப்பிட்ட தரப்பினர் என்றுஅடையாளப்படுத்தியதில்லை. அப்படியே முஸ்லிம்களின் வெளியேற்றம் பற்றிய சம்பவத்தையும் நான் இனச் சுத்திகரிப்பு என்று விமர்சித்தேன். அதற்காக நான் விடுதலைப் புலிகளை அத்தகையவர்கள் என்று கூறியதில்லை. அவர்களின் ஒரு செயல் இனச் சுத்திகரிப்பாக அமைந்தது என்பதுதான் எனது கருத்து. மற்றும்படி அந்த அமைப்பிலிருந்து போராடி உயிர்களைத்தியாகம்செய்தவர்கள், தமது மக்களுக்காகத்தான் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். அது மதிக்கப்படவேண்டியதே. அவர்கள் தமது தனிப்பட்ட நலன்களுக்காகப் போராடச் செல்லவில்லை. தமது இனத்தைப் பாதுகாப்பதற்காகவே போராடினார்கள், அதனால் அவர்களது தியாகம் என்றும் மதிக்கப்படவேண்டியதுதான் என்பதை நான் எப்போதுமே கூறிவந்திருக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஞாபகார்த்த உரையின்போதுகூட இது குறித்து நான் விரிவாகப் பேசி இருக்கின்றேன். இலங்கை அரசும்கூடப் பயங்கரவாதச் செயல்களைச் செய்துள்ளன. ஆலயங்கள், வைத்தியசாலைகள் மீது குண்டுகளை வீசியது உட்படப் பல பயங்கரவாதச் செயல்களைச் செய்துள்ளன. அதனையும் நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அதுபோன்றதே இனச்சுத்திகரிப்புத் தொடர்பான எனது கருத்தும். எனவே இந்த விடயத்தில் என்னிடம் கருத்தியல் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறமுடியாது" என்றார்.

இத்தனை ஆண்டுகளில் நீங்கள் நாடாளுமன்றத்தில் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினீர்கள்அல்லதுஅவர்களை நினைவுகூர்ந்தீர்கள் என்ற செய்தியைநான்பத்திரிகைகளிலோ ஊடகங்களிலோ பார்த்ததில்லை, வேறுநாடாளுமன்றஉறுப்பினர்கள் அப்படி அஞ்சலி செலுத்தினார்கள் என்று நாங்களே செய்திகள் வெளியிட்டிருக்கின்றோம் என்றேன் நான். அதற்கு, மற்றைய உறுப்பினர்கள் தமிழில் பேசுவதால்உங்கள்செய்தியாளர்கள் அவற்றைஉடனேயேசெய்தியாக்கி

## நிறைவேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைச்சாத்திடவில்லை. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் என்னை அழைக்கவில்லை. நான் எதற்கும் இணங்கவில்லை. எதிர்க்கட்சியின் சிலதலைவர்கள்கைச்சாத்திட்டாலும், எந்தவொரு அரசியல் கட்சியின் செயற்குழுவாலும் அவ்விடயம் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே இதனை எங்கிருந்து கொண்டுவந்தனர் என்பது கேள்வியாகின்றது.

2022மே-9ஆம்திகதிக்குமுன்னர் நாம் கலந்துரையாடும்போது இணக்கப்பாடொன்றுக்கு வந்திருந்தோம். அப்போதைய ஆட்சியாளர்களால் முடியாது அவர்கள் ஒதுங்கினால் முதலில் எதிர்க்கட்சித்தலைவர் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு முடியாது விட்டால் யார் இதனை முன்னெடுப்பது என்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடவேண்டும் என்றே முடிவு செய்யப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு மீண்டும் சட்டத்தரணிகள் சங்கம் அவசியமில்லை. 7ஆம் 8ஆம் திகதிகளில் சட்டத்தரணிகள் சங்கத்தினர் கோட்டாபய ராஜபக் ஷவையும் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

அச்சமயத்தில் பிரதமர் பதவியை எதிர்க் கட்சித் தலைவரிடமோ அல்லது வேறு எவரிடமோ வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை. அரசியல் சார்பற்ற ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்றே அன்று கலந்துரையாடப்பட்டது.

சாலியபீரிஸைஒருநாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து பின்னர் அவரைப் பிரதமராக்குவதற்கு நினைத்தனர். அது இரகசியமான விடயம்அல்ல. அதுஎமக்குத்தெரியும். எனினும் மே ஒன்பதாம் திகதி காலிமுகத்திடல்சம்பவத்துடன்அந்த நிலைமைகள் மாற்றமடைந்தன.

அன்று எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நிராகரித்தார். அது தொடர்பில் நான் அவருடன் விவாதிக்கச்செல்லவில்லை. ஆனால் (ஆளும் தரப்பு உறுப்பினர்களைப் பார்த்து) என்னை அழைக்கச் சொன்னீர்கள். இதனால்ஆடையைத் தைத்துக்கொண்டிருந்தவருக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் பார்த்த வேலையால் பாருங்கள் ஆடை வாங்கித் தைத்தவருக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

அதுவொருபுறமிருக்கையில் நான் பதவியைப் பெற்றேன். பின்னர் பிரதமர் அலுவலகம் கைப்பற்றப்பட்டது. எனது வீட்டுக்குத் தீ வைத்தனர். அச்சமயத்தில் எமக்குத் தெரியாது எதிர்க் கட்சித் தலைவர் உள்ளிட்டவர்கள் சபாநாயகருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அப்போது நான் பதவி விலக வேண்டும் என்று கூறினார்கள். நான் பதவி விலகினால் நடப்பது என்ன? நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ள ஒருவரை தெரிவுசெய்ய வேண்டும். அவ்வாறு பெரும்பான்மைகொண்ட நபர் யார் என்பது அப்போது கேள்வியானது. அதுமட்டுமன்றி, பெரும்பான்மை உறுதியில்லாத நிலையில் யார் பதவியை வகிப்பது. அவ்வாறு பதவி வகிப்பதற்கு வேறு யாருக்கும் சக்தி இருந்ததா?

அதன் பின்னர், அமைச்சரவை நான் கூட்டினேன். அப்போது பதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரினார்கள். இதுவொரு திங்கட்கிழமை நடைபெற்றது. எனினும் புதன்கிழமை பிரதமர் அலுவலகத்தினை தாக்கிவிட்டு அங்கிருந்து நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து முற்றுகையிட்டு கைப்பெற்றுவதற்கு முயற்சித்தனர். இறுதியில் என்ன நடந்தது?

இவர்களுக்கு (எதிரணிக்கு) ஆட்சியைமாற்றவேண்டியதேவை தான் இருந்தது. அவர்களுக்கு நாடாளுமன்றத்தினைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருந்திருக்கவில்லை. இது தொடர்பில் விசாரணை செய்வதற்கு எமக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் நான் சொல்வதை நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் இங்கு வாதப்பிரதிவாதம் செய்து பயனில்லை. நாடாளுமன்றத்தில் குழுவொன்றை நியமித்து ஆராய்கின்றபோது இதற்குப் பின்னால் இருக்கின்ற சக்தி என்னவென்று புலப்படும். அதனைத்தான் நாமும் பார்க்கின்றோம்.

இந்த விடயத்தினை யார் திட்டமிட்டது? நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் இருப்பார் என்றுதான் நான் அதனைக் கேட்டேன். அவர் இல்லையல்லவா. சென்று வருகின்றேன் என்றார்.

# அரசின் ஊடகச் சட்டமூலங்கள் குறித்து ஐ.நா. தனி அறிக்கை

## அவை சர்வதேச தரத்தில் இல்லையென தெரிவிப்பு

ஒளிபரப்பு ஒழுங் குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் மற்றும் உத்தேசநிகழ்நிலைகாப்புசட்டமூலம் என்பன சர்வதேச தரங்கள் மற்றும் சட்டத்திற்கு இணங்கவில்லை யெனவும் அவை தொடர்பில் அதீத கவனம் செலுத்தப்பட்டுள்ள தாகவும் குறிப்பிட்டு ஐக்கிய நாடுகள் சபை தனி அறிக்கையொன்றை வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான விசேட பிரதிநிதி ஐரின் கான் அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் மற்றும் செயற்படுதலுக்கான உரிமைகளை பாதுகாப் பதற்கான விசேட பிரதிநிதி கிளமன்ட் வூல், மற்றும் தனியார் உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி அனாபிரைன் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள கூட்டு அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:

மனிதஉரிமைகள்தொடர்பிலான உலகளா விய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரி மைகள் தொடர்பான சர்வதேச பிரகடனம் ஆகியவற்றில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இந்தப் பிரகடனங்களால் பாதுகாக்கப்பட்ட தனிநபருக்கானஉரிமைகள், கருத்து வெளியிடுவதற்கு காணப்படும் உரிமை மற்றும் அமைதியாக ஒன்றுகூடுதலுக்கான உரிமை என்பனவற்றை மேற்படி சட்ட மூலங்கள் மீறியுள்ளன.

உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் கூறப் பட்டுள்ள பல விடயங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உலகளாவியபிரடனங்களின்மூலம் எதிர்பார்க் கப்படும் இலக்குகளை நிறைவேற்றவில்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

உத்தேசசட்டமூலங்களின்ஊடாக நிகழ் நிலையில் கருத்து வெளியிடு வதற்கானஉரிமைமீதுகட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கும் ஊடகவி யலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிவில் செயற் பாட்டாளர்களுக்கு எதிராக தடைக ளும் அச்சுறுத்தல்களும் விடுக்கப் படக்கூடும் ஆபத்துக்கள் காணப் படுகின்றன.

இலங்கையில்வாழும்அனைத்து தரப்பினர் மற்றும் புலம்பெயர் தமிழர்களை இலக்கு வைத்து இந்த சட்டமூலங்கள்தயாரிக்கப்பட்டுள்ளன. அவை வௌ;வேறு துறைகளை சேர்ந்தோர்கருத்துவெளியிடுவதற்கு காணப்படும் உரிமை மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத் திற்கமைய ஆணைக்குழுவை நியமிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால், அரசாங்கம் தொடர்பில் பக்கசார்பற்ற முறையில் செயற்படும் ஊடக நிறுவனங்களை தண்டிக்கவோ அல்லது உரிமத்தை இரத்து செய்யவோ நாட்டின் நிர்வாக அதிகாரிகளுக்கு வாய்ப்பு கிடைப்பதாக உள்ளது.

இந்தக் கண்காணிப்புச் செயற்பாடு சுதந்திரமான மற்றும் அழுத்தங்களுக்கு உட்படாத அமைப்பாக இருக்க வேண்டும் அதில் அரசியல் தொடர்புகள் இருக்கக்கூடாது என்பது மிகவும் முக்கியமானதாகின்றது.

ஆகவே இலங்கை அரசாங்கம் இந்த இரு சட்டமூலங்களையும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பொதுமக்களின் கருத்தைக் கேட்டறிந்த பின்னர் முறையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

## மட்டு. தரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்து தற்பொழுது பெரும் வரி செலுத்தும் நிலைமைக்கு தள்ளப்படுள்ளார்கள். இருப்பினும் இவர்களும் இப் பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்படுள்ளனர். ஆனால் இவர்களின் தற்போதைய செயல்பாடுகள் இன விரோதத்தை மென்மேலும்தூண்டும்விதமாகவும் அவமரியாதைசெய்யும்விதமகாவும் அமைந்துள்ளது.

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டுவந்த நினைவு தூபிகள் அகற்றப்பட்டதை நான் மிகவும் துக்ககரமான சம்பவமாக கருதுகின்றேன்.

ஓர் இனத்துக்காக இனத்தின் விடுதலைக்காக போராடிய வீரர்கள் துயிலும் இந்த இல்லங்களை அழிப்பதுஎமதுசமூகத்துக்குமிகவும் மன வேதனையளிப்பதாகும். அவர்களின் பெற்றபெற்றோர்கள் மற்றும்சகோதரர்கள் உறவினர்கள் பிள்ளைகளின் மனநிலையை யோசித்துப் பாருங்கள் என்றார்.

## அமெ. தூதரகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டதோடு, மிலேச்சத்தனமானதாக்குதல்களை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டிணைந்து முன்னெடுப்பதாக கோசங்கள் எழுப்பபட்டன.

அப்பாவி பலஸ்தீனர்கள் மீதான தாக்குதல்களை நிறுத் துமாறு போராட்டக்காரர்கள் வலியுறுத்தியசமயத்தில்பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மத்தியில் கூடினர்.

இதனையடுத்து ஆர்ப்பாட் டக்காரர்களைதடுத்துநிறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்ததோடு தொடர்ச்சியாக கோசங்களை எழுப்பியவாறு இருந்த மின்சாரப் பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு கொள்ளுப்பிட்டி பொலிஸ்நிலையத்துக்குஅழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர்,பொலிஸ்நிலையத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுகூடியபோது அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு பொலிஸார் கூறியதை அடுத்து ஆர்ப்பாட்;டக்காரர்களுக்கம், பொலிஸாருக்கும் இடையில் தர்க்கங்கள் நடைபெற்றன.

இந்தச் சமயத்தில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டதோடு ஆர்ப்பாட்டக்காரர்கள்பொலிஸாரால் வலிந்து வெளியேற்றப்பட்டனர். இதனையடுத்து கைதுசெய் யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# ரெலிகொம்மை தனியார் மயப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து கடும் போராட்டம்

## கொழும்பில் நேற்று நடந்தது

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறு வனத்தை தனியார் மயப்ப டுத்தப்படுவதற்குஎதிர்ப்புத்தெரிவித்து தொழிற்சங்கங்கள்நேற்றுமாபெரும் ஆர்ப்பாட்டத்தினைமுன்னெடுத்தனர்.

கொழும்புகோட்டையில்உள்ள ஸ்ரீலங்கா டெலிக்கொம் நிறுவ னத்தின் தலைமையகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய பல்வேறு தொழிற்சங்கங்கள்டெலிக்கொம்மை தனியார்மயப்படுத்துவதற்குஎதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தன.

இச்சமயத்தில் நீர்த்தாரை வாகனங்களும், கலகத்தடுப்பு வீரர்களும் அவ்விடத்திற்கு வரவளைக்கப்பட்டனார்.

இச்சமயத்தில் தொழிற்சங் கங்களின்பிரதிநிதிகள்கோசங்களை எழுப்பியதோடு, தமது கடுமையான கண்டனங்களை தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக பதிவு செய்தனர்.

இதன்போது, உரையாற்றிய இலங்கை அனைத்து தொலைத் தொடர்புஊழியர்சங்கத்தின்தலைவர் ஜகத் குருசிங்க, டெலிக்கொம் நிறு வனத்தினால் யாருக்கு பிரச்சினை என்று தெரியவில்லை. அதனை தனியார்மயப்படுத்துவதற்குவலிந்து முயற்சிகளை முன்னெடுகின்றனர். இதனைப்பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவின்மூன்றுநிறுவனங்கள் போட்டியிடுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே டெலிக்கொம் நிறுவனம் விற்பனை செய்யப்படுகின்றது. இதுமட்டுமல்ல, வங்கிகளையும்,தபால் நிலையங்களையும், காப்புறுதி நிறுவனங்களையும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அதற்கு எதிராக நாம் சகல ஊழியர்களையும் இணைத்துபோராட்டம்நடத்துவோம் என்றார்.இதனையடுத்து, ஆர்ப்பாட் டக்காரர்கள் பேரணியாகச் செல்ல முயன்றபோது பொலிஸார் எச்சரிக்கை செய்து அவர்களை தடுத்து நிறுத்தினார்கள். இத னையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்துசென்றனர்.

## சஜித்தின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களேஏன்வெளியேறுகின்றீர்கள். எமது கருத்துக்களையும் செவிமடுங்கள். நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கும் பதிலளியுங்கள். என்னுடையகேள்விகளைக்கண்டு அச்சமடைகின்றீர்களா. அவற்றுக்கு பதிலளிக்க முடியாதென்றா வெளியேறுகின்றீர்கள். ஜனாதிபதி அவர்களே கூறுங்கள் ஜனாதிபதி அவர்களே வாருங்கள். வந்து அமருங்கள். கருத்துக்களைச் செவிமடுங்கள்'' என்றார்.

அதற்குப்பதிலளிக்காதுஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவெளியேறிச் சென்றார்.

இதனையடுத்து, ஜனாதிபதி ரணிலின் கூற்றுக்கள் தொடர்பில் பதிலளிப்பதற்கு தனக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் கோரவும், அவ்வாறு பதிலளிக்க முடியாது என்று சபைக்குதலைமை தாங்கிய உறுப்பினர் பதிலளித்தார். எனினும், எதிர்க்கட்சியின் நேரத்தில் தான் கருத்துக்களை வழங்கப்போவதாக கூறி விவாத நேரத்தினைப் பெற்றுக்கொண்டு கருத்துக்களை வெளியிடலானார்.

அப்போது, நான் கவலையடைகின்றேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகத்தினை மதிக்கும் தலைவர் என்று அறியப்பட்டாலும் எமது கருத்துக்களை செவிமடுத்து அவற்றுக்குபதிலளிப்பதற்குஅவருக்கு முதுகெலும்பு காணப்படவில்லை என்றார்.

இச்சமயத்தில், இராஜாங்க அமைச்சர் இந்த அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கருத்துக்குத்தான் ஜனாதிபதி பதிலளித்தார். ஆகவே ஜனாதிபதியின் கருத்துக்கு எதிர்க் கட்சித்தலைவர்பதிலளிக்கமுடியாது. எதிர்க் கட்சித் தலைவர் சுமந்திரன் ஆக முடியாது என்றார்.

தொடர்ந்து, எதிர்க்கட்சித்தலைவர் சஜித், கமராவை என்பக்கம் திருப்புங்கள், ஒலிவாங்கிகளை வழங்குங்கள். எதிர்க்கட்சிக்கான நேரத்தில் தான் கதைக்கின்றோம். எமக்கு நேரம் உள்ளது. அதற்கு எல்லையே இல்லை. நான் விவாதத்தில் கலந்து உரையாற்றும் உறுப்பினராகவே இங்கு உரையாற்றுகின்றேன் என்றார்.

இச்சமயத்தில் ஒழுங்குப் பிரச்சினையைஎழுப்பியவாறுஎழுந்த

தொடர்ச்சி 8ம் பக்கம்...

# இலங்கை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாடு தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் மிகமோசமாக மீறப்பட்டிருக்கின்ற போதிலும், இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இடமளித்திருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையின் பிரகாரம் நிறைவேற்றப்படவேண்டிய கடப்பாடுகள் மற்றும் பூர்த்திசெய்யப்படவேண்டிய நிபந்தனைகளை அடிப்படையாகக்கொண்டு கடந்த 2020 - 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் என்பவற்றை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றிய விசேட அதிகாரிகளின் கூட்டு அறிக்கை இரு தினங்களுக்கு முன்னர் ஐரோப்பிய நாடாளுமன்றம் மற்றும் ஐரோப்பிய பேரவை ஆகியவற்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் எவ்வாறு காணப்பட்டது என்பது குறித்து மிகப்பரந்துபட்ட ரீதியில் இந்த அறிக்கையில் ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக அரசாங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பவற்றின் சுயாதீனத்தன்மை மற்றும் செயற்திறன் என்பன அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் விளைவாகக் கேள்விக்கு உள்ளாகியிருப்பதாகவும், மந்தகரமான நல்லிணக்க செயன்முறை மற்றும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் தொடர் பிரயோகம் என்பன சிறுபான்மையின மக்கள் நடத்தப்படும் விதம் தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவித்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி ஐரோப்பிய ஒன்றியம், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான கடப்பாட்டை இலங்கை அரசாங்கம் மீளுறுதிப்படுத்தவேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பில் மாத்திரமன்றி ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெறும் ஏனைய நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்தும் இவ்வாறான மதிப்பாய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் அம்மதிப்பாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.


ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப்பெறும் நாடுகள் தொடர்பில் ஐரோப்பிய ஆணைக்குழு வெளியிட்டுள்ள மதிப்பாய்வு அறிக்கைகளின் மூலம் பெரும்பாலான நாடுகளின் அரசாங்கங்கள் மீறல்களில் ஈடுபட்டுவருவது வெளிப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள மனித உரிமைகள் கண் காணிப்பகம், 'இவ்வறிக்கைகளின்படி சில நாடுகளுக்கு அவற்றின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் அதேவேளை, மேலும் சில நாடுகள் அவற்றின் மனித உரிமை மீறல்களுக்கான பின்விளைவுகள் தொடர்பில் அச்சமின்றி செயற்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருக்கின்றது' என விசனம் வெளியிட்டுள்ளது. 'மிகத்தெளிவானதும், பகிரங்கமானதுமான நிர்ணயங்கள் இல்லாவிடின் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் விதிக்கப்படும் நிபந்தனைகள் அவற்றுக்குரிய நம்பகத்தன்மை இழந்துவிடும்' எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் மிகமோசமாக மீறப்பட்டிருக்கின்ற போதிலும், கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை போன்ற நாடுகள் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்கு இடமளிக்கப்பட்டிருப்பதாகவும் அதில் கரிசனை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், 'இலங்கை கடந்த 2010 ஆம் ஆண்டு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை இழந்ததுடன், மனித உரிமைகள்சார் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு அமைவாக மீண்டும் 2017 இல் அச்சலுகையைப் பெற்றுக்கொண்டது. இருப்பினும் அவை இன்னமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எதுஎவ்வாறெனினும் தனிப்பட்ட வழக்குகள் மற்றும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை மறுசீரமைத்தல் உள்ளிட்ட சட்டவியல் நடவடிக்கைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ச்சியாகவும், பகிரங்கமாகவும் கரிசனைகளை வெளியிட்டுவந்தது. அதுமாத்திரமன்றி ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைத் தக்கவைத்துக்கொள்வதற்கு இலங்கை செயற்திறன்மிக்க முன்னேற்றத்தைக் காண்பிக்கவேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியிருந்தது' எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சூத்திரதாரிகளை எனக்கு அதிகாரம் கிடைத்தால் தண்டிப்பேன்

## சரத் பொன்சேகா திட்டவட்டம்



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தொடர்ந்து பேசப்படுகிறது. தேசிய பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தினருக்கும், ஏனைய மக்களுக்கும் இதுவரை நியாயம் கிடைக்கவில்லை. குண்டுத்தாக்குதலுக்கு யார் முக்கிய சூத்திரதாரி என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

எனக்கு வாய்ப்பு கிடைத்தால் சூத்திரதாரிகளையும், கடமைகளை தவறவிட்டவர்களையும் நிச்சயம் சிறைக்கு அனுப்புவேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற் றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

தேசிய பாதுகாப்புடன் பொருளாதாரம், சுகாதாரம், உணவு பாதுகாப்பு தொடர்புபட்டதாக ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

நாட்டின் ஒருமைப்பாடு, ஆட்புல எல்லை, பொருளாதாரம், வெளிநாட்டு உறவு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்புபட்டுள்ளன. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தேசிய பாதுகாப்பு பல வீனப்படுத்தப்பட்டது. ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தமது குறு கிய தேவைகளுக்காக தேசிய பாது காப்பைப் பலவீனப்படுத்தின. இதன் பெறுபேறும் ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு துறையில் முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளுக்கு 423 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை காட்டிலும் இம்முறை 12 பில்லியன் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இராணுவத்துக்கு 218 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் வாழ்க்கை செலவுகள் உயர்வடைந்துள்ள பின்னணியில் இம்முறை பாதுகாப்பு துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாதுகாப்பு துறைக்கு அதிக நிதி ஒதுக்குவது அவசியமற்றது என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். பொருளாதாரப் பாதிப்பு என்பதற்காக வீட்டுக்கு ஜன்னல் மற்றும் கதவுகளை பொருத்தாமல் இருக்க முடியாது.

தேசிய பாதுகாப்புக்கு வருடாந்தம் இந்தியா 81 பில்லியன் டொலர், பாக்கிஸ்தான் 10.3 பில்லியன் டொலர், பங்களாதேஸ் 5.பில்லியன் டொலஷ், நேபாளம் 0.4 பில்லியன், இலங்கை 1.1 பில்லியன் டொலர், மலேசியா 3.4 பில்லியன் டொலர், இந்தோனேசியா 9.1 பில்லியன் டொலர், சீனா 292 பில்லியன் டொலர், தாய்லாந்து 5.7 பில்லியன் டொலர், தென்கொரியா 46.பில்லியன் டொலர், ஜப்பான் 46 பில்லியன் டொலர் ஒதுக்குகின்றன. இலங்கையும் , நேபாளும் மாத்திரமே 1 சதவீதத்துக்கு இடைப்பட்ட அளவில் நிதி ஒதுக்குகின்றன. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நேபாளத்தை காட்டிலும் குறைவான அளவு நிதியை தேசிய பாதுகாப்புக்கு ஒதுக்க முடியாது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இராணுவத்தினரது எண்ணிக்கை சடுதியாக குறைவடைந்துள்ளது. இறுதி கட்ட யுத்தத்தின் போது 2 லட்சமாக காணப்பட்ட இராணுவத்தினரது எண்ணிக்கை தற்போது 153000 ஆக காணப்படுகிறது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இராணுவத்தினரது எண்ணிக்கையை ஒரு லட்சமாக குறைப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. இது ஒருபோதும் சாத்தியமடையாது. நவீன உலகுக்கு பொருந்தும்வகையில் இராணுவத்துக்கு ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போதைய நிலையில் பயன்படுத்த முடியாத யுத்த தாங்கிகளே இராணுவத்திடம் உள்ளன. விமானப்படையிடம் ஒரு ஜெட் விமானம் மாத்திரமே உள்ளது .ஆகவே இம்முறை புதிய ஆயுதங்களை கொள்வனவு செய்ய வேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் தொடர்ந்து பேசப்படுகிறது. தேசிய பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தினருக்கும், ஏனைய மக்களுக்கும் இதுவரை நியாயம் கிடைக்கவில்லை. குண்டுத்தாக்குதலுக்கு யார் முக்கிய சூத்திரதாரி என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம். எனக்கு வாய்ப்பு கிடைத்தால் சூத்திரதாரிகளையும், கடமைகளை தவறவிட்டவர்களையும் நிச்சயம் சிறைக்கு அனுப்புவேன். - என்றார். (05)

# ஊழல் ஒழிப்பு தொடர்பாகப் பாடம் கற்பிக்கிறார் மிலிந்த மொறகொட

## நீதியமைச்சர் விஜயதாஸ கடும் விசனம்

அரச நிதியை மோசடி செய்தவர் என்று நீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்ட மிலிந்த மொரகொட, ஊழல் மோசடி தொடர்பில் தற்போது பாடம் கற்பிக்கிறார். இவ்வாறானவர்களின் கட்டுரைகளை வெளியிடும் ஊடகங்கள் கடந்த காலங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஊழல் ஒழிப்பு தொடர்பில் மிலிந்த மொரகொட தேசிய பத்திரிகைக்கு கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இவரும், பி.பி ஜயசுந்தரவும் ஒன்றிணைந்து செய்த முறைகேடுகளை 2007 ஆம் ஆண்டு நான் கோப் குழு ஊடாக வெளிப்படுத்தியுள்ளேன்.

125 பில்லியன் ரூபா பெறுமதியான ஸ்ரீ லங்கா காப்புறுதி நிறுவனத்தை 6 பில்லியன் ரூபாவுக்கு தனியார் மயப்படுத்தியதை கோப் குழுவின் ஊடாக வெளிப்படுத்தினேன். இந்த முறைகேடு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அப்போதைய அரசாங்கத்திடம் வலியுறுத்தினேன். ஆனால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. ஆனால் உயர் நீதிமன்றம் இந்த முறைகேட்டை சுட்டிக்காட்டி 14 நாள்களுக்குள் காப்புறுதி நிறுவனத்தை மீண்டும் அரசுடைமையாக்குமாறு தீர்ப் பளித்தது.

அதனைத் தொடர்ந்து கொழும்பு துறைமுகத்துக்கு சொந்தமான எட்டரை ஏக்கர் காணி தனியாருக்கு விற்கப்பட்டது. இதனால் அரசுக்கு ஒரு சதம் கூடக் கிடைக்கவில்லை என்று கோப் குழுவில் ஊடாக வெளிப்படுத்தினேன். இதனை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இந்த முறைகேடுக்கு எதிராகத் தீர்ப்பளித்தது.

மிலிந்த மொரகொட அமைச்சராக பதவி வகிக்கும் போது இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றன. அதற்கு அவரது அமைச்சின் செயலாளராக இருந்த பி.பி. ஜயசுந்தர ஒத்துழைப்பு வழங்கினார். இவர்களின் செயற்பாட்டை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டி நிராகரித்துள்ளது. இவ்வாறான பின்னணியில் தான் இவர் தற்போது ஊழல் ஒழிப்பு தொடர்பில் கட்டுரை எழுதுகிறார்.

பல மோசடிகளுக்குத் துணை போன மிலிந்த மொரகொட உள்ளிட்டவர்கள் எழுதும் கட்டுரைகளை வெளியிட முன்னர் ஊடகங்கள் அவர்களின் பின்புலத்தை ஆராய வேண்டும். அல்லது அந்த கட்டுரைகளின் முடிவில் அவர்களின் கடந்த காலத்தை சுட்டிக்காட்ட வேண்டும். - என்றார். (05)

# தமிழ் கட்சிகளை தடைசெய்ய வேண்டுமென்று கூறுபவரின் மூளையை பரிசோதிக்கவேண்டும்

## அநுர குமார சாட்டை



போர் நிறைவடைந்து 14 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நாட்டில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. வடக்கு தமிழ் அரசியல் கட்சிகளை தடை செய்யவேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பு உறுப்பினரது மூளையை பரிசோதனை செய்ய வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

இலங்கை பல்லின சமூகம். தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகங்களை ஒன்றிணைத்து தேசிய நல்லிணக்கம் உறுதி செய்யப்பட்டால் தான் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். இனவாத கருத்துக்களின் வெளிப்பாடுகளால் தான் 30 வருட கால யுத்தம் தோற்றுவிக்கப்பட்டது.

ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு கட்டவிழ்த்து விட்ட இனவாதங்களால் தான் இந்த நாடு 30 வருட கால யுத்தத்தை எதிர்கொண்டது.

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவடைந் துள்ள நிலையிலும் இனங்களுக்கு கிடையில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை.

வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பின் உறுப்பினரது மூளையை பரிசோதனை செய்ய வேண்டும். இவர்கள் ஒருபோதும் தேசிய நல்லிணக்கத்தை எதிர்பார்க்கவில்லை. இனவாதம் தோற்றம் பெறும் வகையில் தான் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள்.

இனவாதத்தைப் பரப்பி அதன் ஊடாக தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவே தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். வடக்கு மற்றும் தெற்கில் அரசியல் தீர்வுகளுக்கு முன்னர் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். எமது அரசியல் செயற்பாடுகள் தேசிய நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதாக அமையும். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறை ஒழிப்பு

நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமை மீண்டும் நாட்டில் பேசு பொருளாகியுள்ளது. நிறைவேற்று அதிகாரத்தைச் சமநிலைப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்தின் ஊடாக நியமிக்கப்படும் அரசமைப்புப் பேரவையுடன் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முரண்படத் தொடங்கியிருப்பதைத் தொடர்ந்து இந்த விடயம் மீண்டும் பேசு பொருளாகியுள்ளது.

காவல் மா அதிபர் ஒருவரைப் புதிதாக நியமிப்பது தொடர்பில் அரசுத் தலைவரின் பரிந்துரையை இரண்டு தடவைகள் அரசமைப்புப் பேரவை நிராகரித்துள்ளது. பதவியில் இருக்கும் காவல் மா அதிபரின் பதவியைத் தொடர்ந்தும் நீடிப்பது அரசமைப்புக்கு முரணானது என்றும் அரசமைப்புப் பேரவை உறுப்பினர்கள் விமர்சிக்கின்றனர். இதனால் ஆத்திரமுற்றுள்ள அரசுத் தலைவர் அரசமைப்புப் பேரவையின் நடவடிக்கைகள் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிப்பது குறித்துப்பேசியிருக்கிறார். அதன்மூலம் அரசமைப்புப் பேரவைக்கு அழுத்தங்களைக் கொடுத்துத் தனது பக்கம் வளைப்பதற்கு அவர் முற்படுகின்றார் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

ஏற்கனவே அரசமைப்புப் பேரவைக்கு நியமிக்கப்படவேண்டிய சிறு மற்றும் சிறுபான்மைக் கட்சிசார் பிரதிநிதித்துவத்திற்கான நியமனம் வழங்கப்படவில்லை. அந்த நியமனம் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்படவேண்டும்என்றும்அதற்கானபிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார் என்றும் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்ட பின்னரும் அவர் பேரவைக்கு நியமிக்கப்படவில்லை.

இவைகுறித்தசர்ச்சைகளின்மூலமேநிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமை மீண்டும் பேசு பொருளாகியுள்ளது. சந்திரிகாக குமாரணதுங்க முதல் தொடர்ந்து பதவிக்கு வந்த அனைத்து அரசுத் தலைவர்களும் (கோட்டாபய நீங்கலாக) இந்த முறையை நீக்குவதாக வாக்களித்தவர்கள்தான். ஆனால், யாரும் தமது பதவிக் காலத்தில் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேயில்லை. அதிகாரம் கிடைகக்கும் வரைக்கும் அது வேண்டாம், அதனை மாற்றவேண்டும் என்பவர்கள் அதிகாரம் கிடைத்ததும் அதனை ஆண்டனுபவிக்கவே விரும்புகின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு விதிவிலக்கல்ல.

நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமை நாட்டின் சாபக்கேடு என்று விமர்சித்து வந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க. 2015இல் ரணிலின் ஆதரவுடன் மைத்திரிபால சிறிசேன அரசுத் தலைவர் தேர்தலில் முன்னிறுத்தப்பட்டபோ–து இந்த விடயமே முக்கிய வாக்குறுதியாகவும் இருந்தது. ஆனால் பின்கதவால் இன்று அந்தப் பதவியை அடைந்துவிட்ட பின்னர் அதிகாரங்களைக் கைவிட ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விருப்பமில்லை. அதனாலேயே மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைப் பிற்போட்ட ரணில், அடுத்த ஆண்டில் அரசுத் தலைவர் தேர்தலை முதலில் நடத்துவதில் தீவிரம் காட்டிவருகின்றார். காரணம் அந்த அதிகாரங்கைளத் தானே தொடர்ந்தும் ஆண்டனுபவிக்க வேண்டும் என்கிற ஆசைதான்.

இது ஏற்புடையதல்ல. நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமை நாட்டில் இருந்து முற்றிலுமாக ஒழிக்கப்படவேண்டும். அதற்குப் பதிலாக நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பலப்படுத்தப்படவேண்டும். அதற்கான மக்கள் ஆதரவும் திரட்டப்படவேண்டும்.



## மனித இனத்தின் அடையாளமாகிறதா

# நெகிழி?

**லோ.பார்த்தீபன்**

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ் சால மிகுத்துப் பெயின் திருக்குறள்(475)

(குறிப்பு: இக்குறளுக்கான விளக்கத்தைஅறிந்துகட்டுரையை படிக்க தொடங்கவும்)



'பிளாஸ்டிக்ஸ்' எனப்படும் நெகிழியைநாம்பார்க்காதஇடமே இல்லை. பலசரக்குக் கடைகளில் விற்கப்படும் பெரும்பாலான பொருட்களில் இருந்து அவற்றை வாங்கிச்செல்லும் பைகள் வரை எங்கு பார்த்தாலும் பிளாஸ்டிக், எதில் பார்த்தாலும் பிளாஸ்டிக்ஸ். மனித சாம்ராஜியத்தின் தவிர்க்க முடியாத, தவிர்க்க நினைத்தாலும் முடியாத பொருளாய் விளங்குகிறது. நெகிழிக்குத் தடை தடை என்று ஆட்சியாளர்கள் எவ்வளவுதான் மீண்டும் மீண்டும் அறிவித்தாலும் சட்டங்கள் இயற்றினாலும் அதனை மனிதப் பாவனையில் இருந்து அகற்றுவது அவ்வளவு சுலபமானதாக இல்லை.

திரும்பும் திசையெங்கும் பிளாஸ்டிக் மயமாகிய நிலையில், பிளாஸ்டிக் இப்போது புதுப்புது பரிணாமங்களில் உலா வந்துகொண்டிருக்கிறது. அதில் ஒருவகைதான் நுண்நெகிழி (micro plastics). மிகமிகச் சிறிய அளவினைக் கொண்ட இந்த நுண்நெகிழிகள் குடிநீரில் கண்டறியப்படுள்ளன. அதுமட்டுமல்லாமல் மனிதக் குருதியிலும், தாய்ப்பாலிலும்கூட இந்த நுண்நெகிழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது பிளாஸ்டிக்கின் அசுரத்தனமான ஆக்கிரமிப்பை நமக்கு உணர்த்துகிறது.

ஒரே இடத்தில் அதிகமாகக் கொட்டி சேர்க்கப்படும் குப்பைக் கிடங்கு போன்ற இடங்கள் மற்றும் அதன் அருகாமைப்பகுதிகளிலும், சுற்றலாத் தலங்களிலும் உள்ள நிலத்தடிநீரில் நுண்நெகிழிகளாக பரிணமிக்கின்றன

மேலும் கடல்களில் கொட்டப்படும் அதிகளவிலான நெகிழிக் குப்பைகளால் மீன்களில்கூட அவை கண்டறியப்பட்டுள்ளது. சைவ உணவு உண்பவர்கள்மகிழ்ச்சியடையவேண்டாம். பழங்களிலும், காய்கறிகளிலும், கீரைகளிலும் நுண்நெகிழிகள் கண்டறியப்பட்டுள்ளது

இப்படி நம் உணவுகளில் ஒரு அங்கமாய் மாறிய நுண்நெகிழிகள் நம் உடலை அடைகின்றன. இப்படி தான் நம் இரத்தநாளங்கள் தொடங்கி தாய்ப்பால் வரையிலும் கலக்கத் தொடங்கியுள்ளது. இந்த செய்தி பல பேருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தலாம், உண்மை என்னவென்றால் இவையனைத்தும் குறைந்தபட்சம் ஓராண்டுக்கும் மேலான பழைய செய்தி.

இனிமேல் தான் அதிர்ச்சி ஏற்படுத்தும் செய்தியைக் கூறப் போகிறேன்.

இப்புவியில் ஏற்கெனவே உருவான புதுப்புது பாறை வகைகள், கனிம வகைகள் அல்லது கற்களின் வகைகளைதான் மனிதன் கண்டுப்பிடித்து அவற்றின் தோற்றம், வயது போன்றவற்றை ஆராய்ந்து அதற்குப் பெயரும் சூட்டியுள்ளான். இப்படி அவன் கண்டுப்பிடித்த பாறைகளை ஆராய்ந்து, பூமியின் வரலாற்றில் எந்தெந்த உயிரினங்கள் வாழ்ந்தன, அவற்றின் காலம், போன்றவற்றையெல்லாம் கண்டுப்பிடித்தான். உதாரணமாக 'ஜுராசிக்' எனும் காலக்கட்டத்தில் டைனோசர்கள் வாழ்ந்தன. அவற்றின் படிமங்களை வைத்து காலகட்டத்தை வரையறுத்துள்ளது அறிவியல் சமூகம். அதுபோல மனிதன் வாழ்ந்த காலக்கட்டத்தில் ஒரு புதுவகையான பாறை ஒன்று உருவாக மனிதனின் செயல்பாடு கள் காரணமாக இருந்துள்ளது.

ஒரு பாறை எரிமலை குழம்பிலிருந்து உருவாகும். ஆனால், இப்போது சிலபாறைகள், நெகிழிக் கழிவுகளுடன் சேர்ந்து புது–வகையானபாறைகளாகதோற்றம் அளிக்கின்றன. அவற்றிற்கு பிளாஸ்டிகிரஸ்ட் (Plasticrust), பொலிகோமெரட் (Polygomerate) என பெயரிடப்பட்டுள்ளது.



மனிதன் வாழ்ந்த காலக் கட்டத்தில் மட்டுமே கிடைக்கும் பிரத்யேகமான பாறைகளாக இவை திகழ்கின்றன.

இப்பாறைகள்மனிதஆதிக்கம் நிறைந்த பகுதிகள் தாண்டி மனித ஆதிக்கம் இல்லாத பகுதிகளிலும் உருவாகியுள்ளன. இந்த பூமி பெருங்கடல்களால் சூழப்பட்டது என்பது பழைய கூற்றாக மாறி விட்டது.

இந்த பூமி பிளாஸ்டிக்கால் சூழப்பட்டது என்பதே சரியாகும்.

இப்போது இந்த கட்டுரையின் தொடக்கத்தில் உள்ள திருக் குறளை படித்துவிட்டு வாருங்கள்.

170 ஆயிரம் கோடி நெகிழித் துகள்கள் நம் கடல்களில் மிதக்கின்றன. இன்னும் இரண்டு ஆண்டுகளில் 250 மெட்ரிக் டன் அளவு பிளாஸ்டிக் இறுகும் என ஆராய்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த 250 மெட்ரிக் டன்னில் பாதியளவு ஆசியப் பகுதிகளில் இருக்குமென அதிர்ச்சியளிக்கின்றனர்.

மக்கள் தொகை அதிகம் உள்ள பகுதியாகவும், வளர்ந்து வரும் நாடுகளின் எண்ணிக்கை அதிகம் உள்ள பகுதியாகவும் ஆசியா விளங்குவது மட்டுமின்றி மேற்குலக மற்றும் வளர்ந்த நாடுகளின் குப்பைக் கொட்டும் பகுதியாகவும் உள்ளது. இதுவே ஆசியப் பகுதிகளில் அதிகம் பிளாஸ்டிக் இருப்பதற்கு காரணமாக விளங்குகிறது

இவ்வளவு அபாயம் கொண்ட நெகிழி அதன் ஆபத்து உணரப்பட்ட காலகட்டத்தில்தான் இரண்டு மடங்கு உற்பத்தி செய்–யப்பட்டுள்ளது. தன் இலாபத்திற்காக அதிகம் உற்பத்தி செய்துவிட்டு, அந்த குப்பைகளுக்கான பொறுப்பை நம்மை ஏற்கச் சொல்வதில் என்ன நியாயம்இருக்கின்றது? இந்த நெகிழி உற்பத்தி தொடருமேயானால் கடல்களில் மீன்களைவிட நெகிழிக் குப்பைகள்தான் அதிகமாக இருக்கும். பெருநிறுவனங்கள் நெகிழி உற்பத்தியை நிறுத்திக்கொண்டு ஏற்கனவே உற்பத்தி செய்த நெகிழிக்களுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

வளர்ந்த நாடுகளில் ஒரு நிறுவனம் உற்பத்தி செய்த நெகிழி புட்டிகளுக்கு அந்த நிறு வனமே பொறுப்பாக இருக்கின்றது.

இந்த நடை முறை வளர்ந்த நாடுகளில் பின்பற்றப்படுகிறது. இதனை உற்பத்தியாளருக்கு நீடிக்கப் பட்ட பொறுப்பு (Extended Producer Responsibility) என்பர். இந்த நடைமு–றையை நம் நாட்டிலும் பின்பற்ற பெருநிறுவனங்களை வலியுறுத்த வேண்டும்.

இதுவே நெகிழியின் அளவைக் குறைக்க நாம் எடுக்கும் மிக முக்கியமான நடவடிக்கையாக இருக்கும்.

# நாட்டு மக்கள் மீது தாக்குதல் நடத்த இராணுவத்துக்கு நிதி ஒதுக்கவில்லை

## அநுர குமார சாட்டை

நாரஹேன்பிட்டி தெரேஸா தேவஸ்தானம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் யார்?, போரட்டத்தில் சந்தேகத்துக்கிடமாக கலந்துகொண்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் யார் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். நாட்டு மக் கள் மீது தாக்குதலை மேற்கொள்ள இராணு- வத்துக்கு நிதி ஒதுக்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

இராணுவம் தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் நிலையான கௌரவம் உள்ளது. ஒரு தரப்பினரது அரசியல் நோக்கத்துக்காக ஒருசில இராணுவத்தினர் செயற்படுகிறார்கள். இதனால் ஒட்டுமொத்த இராணுவத்தின் மீதான மக்களின் மதிப்பு மலினப்படுத்தப்படுகிறது. லசந்த விக்கிரமதுங்க படுகொலை,போத்தல ஜயந்த தாக்குதல், கீத் நொயார் கடத்தல், ஊடகவியலாளர் நாமல் தாக்குதல், பிரகீத் எக்னெலிகொட கடத்தல் உள்ளிட்ட சம்பவங்களுக்கு பின்னணியில் யார் உள்ளார்கள். இந்த சம்பவங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட விசாரணைகள்,அந்த விசாரணைகள் இடைநிறுத்தப்பட்ட விதம் என்பனவற்றை நாங்கள் நன்கு அறிவோம்.

ஒட்டுமொத்தஇராணுவத்தையும்மலினப்படுத்தும் வகையில் இராணுவத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒருசிலர் செயற்படுகிறார்கள்.கடந்த 12 ஆம் திகதி நாராஹேன்பிட்டி தெரேஸா தேவஸ்தானத்தின் முன்பாக போராட்டம் ஒன்று இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 19 ஆம் திகதி தெரேஸா தேவஸ்தானத்துக்கு முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

இந்த போராட்டத்தில் சந்தேகத்துக்கிடமாக கலந்துகொண்ட ஒருசிலரை நாரஹேன்பிட்டிபொலி- ஸார் கைது செய்தனர்.ஆகவே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யார்,அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி ஊடாக அழுத்தம் பிரயோகித்தது யார் என்பதை குறிப்பிடுங்கள்.நாட்டு மக்கள் மீது தாக்குதலை நடத்த இராணுவத்துக்கு நாடாளுமன்றத்தின்ஊடாகநிதிஒதுக்கப்படுவதில்லை.


பாதுகாப்புசெயலாளர்கமல்குணரத்ன 2019 ஆம் ஆண்டு ஹெலிய என்ற ஓர் அமைப்பை ஆரம்பித்து கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்களுக்கு சார்பாக செயற்பட்டார் .அதற்கு பிரதிபலனாகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரை பாதுகாப்பு செயலாளராக நியமித்தார்.

ஆனால் தற்போது இவர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்கிறார்.ஆகவே பிறரின் அரசியல் செயற்பாடுகளை ஆராய்வதற்கு முன்னர் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன அவரது கடந்த காலத்தை மீட்டுப்பார்க்க வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் செயற்பாடுகளில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் ஈடுபடுவதால் அவர்கள் பல்வேறு வழிகளில் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். கிழக்கு மாகாண முன்னாள் கட்டளைத் தளபதி அருன ஜயசேகர உட்பட அவரது மனைவி அண்மையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். போதைப்பொருள் கடத்துவதாக அவர்கள் மீது பொய்- யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன குறுகிய அரசியல் நோக்கத்துக்காக அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆட்சி அதிகாரம் நிலையற்றது என்பதை அவருக்கு காலம் உணர்த்தும். - என்றார். (05)

# சிறுவர்கள் மத்தியில் பரவும் வைரஸ் நோய் அதிகரிப்பு



சிறுவர்கள் மத்தியில் கை, கால் மற்றும் வாய் நோய் பரவி வருவதாக கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலை சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நோய்க்கான அறிகுறிகள் இருந்தால், பெற்றோர்கள் தங்கள் சிறுவர்களை பாடசாலைகள், சிறுவர் பராமரிப்புநிலையங்கள்அல்லதுபொது இடங்களுக்கு அனுப்ப வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், சிறுவர்களுக்கு தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் முகக் கவசங்களை அணிவிக்குமாறு பெற்றோர்களுக்குஅறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய மழையுடனான வானிலை காரணமாக சிறுவர்கள் அழுவது அதிகரித்து வருவதாக வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

விசேடமாக இந்த நோய் சிறுவர்களில் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு மிகவிரைவாகப் பரவுவதாகத் தெரிவித்துள்ளார்.

கைகள், கால்கள்வாயைச்சுற்றியும், வாய்குள்ளும்சிகப்புநிறகொப்பளங்கள் காணக்கூடியதாக இருக்கும். மேலும், கொப்பளங்கள் ஒரு குழுவாகக் காணப்படும். இவை அரிப்பை ஏற்படுத்தாது.

இந்த வகை தொற்று நோய் பொது- வாக காக்ஸ்சாக்கிவைரஸால்பரவுகிறது. குறிப்பாக கொப்புளங்களுக்குள் இருக்கும் திரவம், தும்மல், இருமல் ஆகியவற்றால் பரவுகிறது. நோய் தொற்றுக்குள்ளாகி குணமடைந்து சில வாரங்களுக்குப் பிறகு இந்த வைரஸ் அவர்களின் மலத்திலும் காணப்படும்.

மேலும், கொவிட், டெங்கு காய்ச்சல், இருமல், மூக்கு ஒழுகுதல், தும்மல் மற்றும் தொண்டை வலி உள்ளிட்ட தொற்று அறிகுறிகள் மற்றும் பல வைரஸ் தொற்றுகள் இந்த நாள்களில் சிறுவர்களிடையே பரவுவதாகத் தெரிவித்துள்ளார். (05)

# 115 வகையான மருந்துகள் தரபரிசோதனையில் தோல்வி

இவ்வருடஆரம்பித்திலிருந்துஇது- வரையானகாலப்பகுதிவரைமொத்தம் 115 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன, இது ஒரு வருடத்தில்அதிகஎண்ணிக்கையிலான மருந்துகளின் தரத் தோல்விகளைப் பதிவு செய்துள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது. தர சோதனையில் தோல்வி யடைந்த மருந்துகளில், சுமார் 58 மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை, 45 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை, மற் றவை சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து வந்தவை. தரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகக் கண்டறியப்பட்ட மருந்துகளில், சில திரும்பப் பெறப்பட்டதுடன் சில மருந்துகளின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளன என்றும்சுகாதாரஅமைச்சின்மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஹரக்கட்டாவின் தொலைபேசியை பரீட்சித்தால் பொலிஸ் அதிகாரிகளின் கடமையை அறியலாம்

## தலதா அத்துக்கோரள போட்டுத்தாக்கு



குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் தடுப்பிலுள்ள ஹரக்கட்டாவின் தொலைபேசியை பரீட்சித்துப் பார்த்தால் பொலிஸ் அதிகாரிகளின் கடமை மட்டத்தை அறிந்து கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் -

மகந்துரே மதுஷ், அல்லது ஹரக் கட்டாவின் தொலைபேசியை எடுத்துப் பார்க்கச் சொல்லுங்கள். அதில் யாருடைய எண்கள் உள்ளன என்பதை அறிய முடியும்.

நேர்மையாக பணியாற்றும் நபர்களுக்கு இலங்கை பொலிஸில் இடமில்லை. பாதாள உலக நபர்களின் சவால்களுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் முகம்கொடுக்க நேர்ந்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின்போது போதைப்பொருள் அழிக்கப்பட்டதாக தெரிவித்த அவர் தற்போது என்ன நடக்கிறது எனத் தெரியவில்லை எனவும், போதைப்பொருள் வியாபாரிகளின் கொடுப்பனவு பட்டியலில் பொலிஸ் உயர் அதிகாரிகளின் பெயர்கள் இருக்கின்றன எனவும் தெரிவித்தார். (05)

# மாவட்ட நீதிபதிகள், நீதிவான்கள் 54 பேர் அதிரடியாக இடமாற்றம்

நாடளாவிய ரீதியில் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் கடமையாற்றிய 54 மாவட்டநீதிபதிகள்மற்றும்நீதிவான்கள் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என நீதிச்சேவை ஆணைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடமாற்றம் செய்யப்பட்ட நீதிபதிகள் ஜனவரி முதலாம் திகதி முதல் தங்களது புதிய பணியிடங்களில் பணியைத் தொடங்குவார்கள் என்று நீதிச் சேவை ஆணைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# விளக்கமறியல் கைதி ஒருவர் தப்பி ஓட்டம்

வழிப்பறி கொள்ளை சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தெய்யந்தர நீதிவான் நீதிமன்றத் தில் வழக்கு முடிவடைந்து நீதிமன்ற கடமைகளை நிறைவேற்றிய பின்னர் சிறைச்சாலை அதிகாரிகளால் குறித்த கைதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் கைதி விளக்கமறியலிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் மற் றும் தெய்யந்தர பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அரசியல்வாதிகளினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட ஒரு துறையே பொலிஸ்

## டலஸ் அழகப்பெரும சாட்டை



27 ஆயிரம் இராணுவத்தினர் கடந்த இரண்டு வருடங்களில் சேவையிலிருந்து விலகியுள்ளனர் என டலஸ் அழகப்பெரும நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் இங்கு பிரச்சினை இருப்பதாகவும் உடனடியாக இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் கூட இவ்வாறானதொரு நிலை காணப்படவில்லை என நான் நம்புகிறேன்.

அரசியல்வாதிகளால் கடுமையாக துஷ்பிரயோகம் செய்யப்பட்ட ஒரு துறையே பொலிஸ் துறை.

பொதுமக்களின் பாதுகாப்பில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அவநம்பிக்கை வெளிப்பட்டது. நாட்டில் மாதத்துக்கு 50 கொலைகள் இடம்பெறுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (05)

# பெண் ஒருவர் மீது தாக்குதல் பொலிஸார் மீது குற்றச்சாட்டு

முல்லைத்தீவு விசுவமடு பாரதிபுரம் பகுதியில் வைத்து பொலிஸாரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த பெண் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் குறித்த பெண் அவரது மகன் பேரக் குழந்தை ஆகியோர் உள் வீதியில் இருந்து பிரதான வீதிக்கு பஸ்ஸுக்காக சென்ற போது பாரதிபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் இருந்து வந்த இரு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை மறித்த போது மறித்த இடத்திலிருந்து 20 மீற்றர் தள்ளி மோட்டார் சைக்கிளை நிறுத்தியதாகவும் அவ்விடத்திற்கு ஓடி வந்த பொலிஸார் மறித்த இடத்தில் சைக்கிளை நிறுத்த முடியாதா? என கேட்டு மகனையும் பின்னால் இருந்த தாயான பெண்ணையும் கடுமையாகத் தாக்கினர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த தாய் உடனடியாக தரும்புரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பவ இடத்திலிருந்து பொலிஸார் உடனடியாக வெளியேறிச் சென்றனர் என்றும் கூறப்படுகின்றது. (05)

# மின்சார சபை ஊழியர் மின்சாரம் தாக்கிச் சாவு

புத்தளம்-முந்தல் பிரதேசத்தில் மின்சாரகம்பத்தில் மின்விளக்கு பொருத்தச்சென்ற மின்சாரசபை ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் முந்தல் பிரதேசத்தை சேர்ந்த ராஜ் மதுன் என்ற 26 வயதுடையவர் ஆவார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## சஜித்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இன்றைய (நேற்றைய) விவாதத்தினை இடையில் மறித்து உரையாற்றியது ஜனாதிபதிதான். அவருக்கு பதிலளிப்பதற்கு இப்போது எதிர்க் கட்சித் தலைவர் முனைகின்றார். இன்றைய நாளின் விவாதப்பொருள் எங்கே. இதுவென்ன வேடிக்கையான செயற்பாடுகள். சுபைக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் எதற்காக ஜனாதிபதியின் உரைக்கு அனுமதி வழங்கினார் என்று கேள்வி எழுப்பினார்.

அச்சமயத்தில், எதிர்க் கட்சித் தலைவர் சஜித், என்னுடைய உரை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே திருட்டுக் கூட்டமான மொட்டுக் கட்சியினர் ஆசனங்களில் இருந்து எழுந்து செல்கின்றனர். எனது உரைக்கு அவ்வளவு அச்சமா? மத்திய தரக் குடும்பத்தின் அங்கத்தவரின் உரைக்கு தாக்குபிடிக்கமுடியாதுஅச்சமடைந்தா வெளியேறுகின்றீர்கள்? என்று கேள்வியெழுப்பினார்.

இதன்போது, ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான கோகிலா குணவர்த்தன எதிர்க் கட்சித்தலைவர் பின்வரிசைமற்றும் புதிய உறுப்பினர்களின் கருத்துச் சுதந்திரத்தினை அடக்கும்வகையில் ஒட்டுமொத்த நேரத்தினையும் பெற்றுக்கொள்கின்றார். நாங்கள் மக்களின் வாக்குகளில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்கு வருகைதந்துள்ளநிலையில்எம்மை எவ்வாறு திருடர்கள் என்று அவர் விழிக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

இதன்போது, மீண்டும் எதிர்க்கட்சித்தலைவர்சஜித்பிரேமதச, மொட்டு திருட்டுக் கும்பல் தான். அவர்களுக்கு சபைநடவடிக்கைகள் எதுவும் தெரியாது. நிலையியற் கட்டளைகயை படித்துப்பார்க்க வேண்டும். ஜனாதிபதிக்கு முதுகெலும்பில்லை என்றார்.

இதன்போது ஆளும் தரப்பு உறுப்பினர்களான திஸ்ஸ குட்டியாராச்சி உள்ளிட்டவர்கள், மே ஒன்பதாம் திகதி முதுகெலும்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் போராட்ட களத்திலிருந்து மறுபக்கமாக ஓடியதை மறக்கவில்லை. அப்போது அவருக்கு முதுகெலும்பு இருக்கவில்லையா. அதேநேரம் உறுப்பினர்களை தொடர்ச்சியாக இவ்வாறு கீழ்த்தனமாகவிழிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி உரையாற்றும்போது எதிர்க் கட்சித் தலைவர் அதற்கு பதிலளித்து உரையாற்றும்விடயம்நிலையியற் கட்டளையில் உள்ளதா என்றார்.

மீண்டும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித், அச்சமடைந்த, முதுகெலும்பற்ற, கருத்துக்களுக்கு செவிமடுக்காத ஜனாதிபதியும் அவர்களது கூட்டமும் எதனையும் புரியாது இருக்கின்றார்கள் என்றார்.

அப்போது மீண்டும் திஸ்ஸ குட்டியாராச்சி, அப்படியென்றால் எதிர்க்கட்சித்தலைவருக்குஅழைப்பு விடுக்கப்பட்டபோது எதற்காக பதவியைப் பெற்றுக்கொள்வதை தவிர்த்தார் என்பதைப்கூற முடியுமா என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் தொலவத்த, எதிர்க்கட்சித்தலைவர் எம்மை முட்டாள் என்கிறார் திருடர் என்கிறார். இது எமது சிறப்புரிமையை மீறும் செயலாகும். ஆகவே அவரை இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு யோசனையை முன்வைக்கின்றேன் என்றார். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் வழிமொழிவைச்செய்தார்.

இதனையடுத்து, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபையின் பொறுப்பினைப் பெற்றுக்கொண்டார். அதனையடுத்து மீண்டும்சஜித்பிரேமதாசஏற்கனவே கூறிய விடயங்களை குறிப்பிட்டு தனக்கு உரையாற்றுவதற்கு இடமளிக்குமாறு கோரினார். அத்துடன் தமது கருத்துக்களுக்கு செவிமடுப்பதற்கும், பதிலளிப்பதற்கும் ஜனாதிபதியை மீண்டும் சபைக்குள் பிரவேசிக்குமாறு கோருங்கள் என்றும் குறிப்பிட்டார்.

அச்சமயத்தில் ஆளும் தரப்பு உறுப்பினா மஹிந்தானந்த ஆளுத்கமகே, ஜனாதிபதிபதவியைப் பொறுப்பெடுக்குமாறு கோரியபோது அதனை நிராகரித்தது யார் என்பதால் அவருக்கு எவ்வாறு முதுகெலும்பு உள்ளது அதன் பலம் என்னவென்பதை முழுநாடுமே அறியும். ஆகவேஎதிர்கட்சித்தலைவர் தமது கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும். அவர் எதிர்க் கட்சித்தலைவர் என்றபதவியின் பெறுமதியை உணராது செயற்படுகின்றார். அவர் அளவிற்கு நாம் கீழிறங்கிச் செயற் படப்போதவி;லை. அவ்வாறு செயற்படுவதாக இருந்தால் நிலைமைகள் எவ்வாறு இருக்கும். ஆகவே எதிர்க்கட்சித்தலைவர் உறுப்பினர்களை அவமானப்படுத்தி வெளியிட்டகருத்துக்கள்ஹன்சாட்டில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றார்.

இதனையடுத்து, அமைச்சர் மனுஷ நாணயக்கார, எதிர்க்கட்சித்தலைவர் சஜித்தை மிகக் கடுமையாக விமர்சித்தார். தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சமிந்த விஜயசிறி மனுஷ நாணயக்கரவையும், சபாநாயகரையும் கடிந்தார். எனினும், சபாநாயகர்வழமையான நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் தீவிரம் காட்டினார்.

## கல்முனை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசனால் தாக்கல் செய்யப்பட்ட மனுவையே விசாரணைக்கு ஏற்பதற்கு உயர் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

இந்த வழக்கு நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர்களான பந்துல கருணாரத்ன, சமத் மொராய ஆகியோர் கொண்ட அமர்வு முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது இடையீட்டு மனுதாரர்களாகிய முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர் தரப்பு வாதங்களைப் புறந்தள்ளிய நீதியரசர்கள் கலையரசனின் மனுவைத்தொடர்ந்துவிசாரிப்பதற்கு நீதிமன்றம் முடிவு செய்திருப்பதாக அறிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசனால் இந்த மனு 2023 ஜனவரியில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மனுவை விசாரணைக்கு ஏற்கக்கூடாது என்று சட்டமா அதிபத்திணைக்களத்தினால் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. அது நிறைவுற்று நீதிமன்றம் தனது முடிவை அறிவிப்பதற்கு நெருங்கிய தருணத்தில் வழக்கில் தம்மையும் இடையீட்டு மனுதாரர்களாகச் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஷ் உட்படச்சிலர் உயர் நீதிமன்றத்தை அணுகினர். அதற்குஅனுமதியளித்த உயர் நீதிமன்றம், இடையீட்டு மனுதாரர்களின் வாதங்களையும் கேட்டறிந்த பின்னர் நேற்று இந்த முடிவை அறிவித்தது.

அதனடிப்படையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிகள் தரப்பு தமது ஆட்சேபணைகளை அணைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. 2024 ஜனவரி 17 ஆட்சேபணைகளை அணைக் குமாறும்நீதிமன்றம்உத்தரவிட்டது.

கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேசசெயலகம் உருவாக்கப்பட்டு 34 வருடங்களாகிவிட்டபோதும், அதற்கு நிரந்தர கணக்காளர் ஒருவரை நியமித்து அது முழுமையான பிரதேசசெயலகமாக இயங்க வைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை கல்முனையில் உள்ளமுஸ்லிம்களில்ஒருபகுதியினர் தொடர்ச்சியாகஎதிர்த்துவருகின்றனர். கல்முனையில் உள்ள கடைகளில் பெரும்பாலானவை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் இருக்கையில் அந்தப் பகுதி கல்மனை தமிழ் பிரதேச செயலகத்தின் ஆளுகைக்குள் வருகின்றது. அதனாலேயேஅதனை முழுமையான பிரதேசசெயலகமாக தரம் உயர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. ;

## 4 மின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனவரிமாதம்முதல்செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதிகளில் மாத்திரம் மின்சார சபை 12 பில்லியன்ரூபாநட்டமடைந்துள்ளது. இலாபமடைந்தால் அதன் பயனை மக்களுக்கு நிச்சயம்வழங்குவோம்.

எரிபொருள் மற்றும் மின்சார கட்டமைப்பில் கடந்த ஆண்டு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டோம். எரிபொருள் பற்றாக்குறை, மின்விநியோக துண்டிப்பை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்ற போராட்டம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. பெரும் சவால்களுக்கு மத்தியில் அமைச்சராகப் பொறுப்பேற்றேன். நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி,பிரதமர் உட்பட சகல தரப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகசந்தையின்விலைக்கேற்ப எரிபொருள் விலை மற்றும் மின்சார கட்டணம்நிர்ணயிக்கப்படவேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கமைய 2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் மின்சார கட்டணம் திருத்தம் செய்யப்பட்டது. மின்சார கட்டணத்தை அதிகரிக்காமல் மின்னுற்பத்தி செலவுகளை முகாமைத்துவம் செய்ய 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு முதல் காலாண்டு வரை திறைசேரி சுமார் 400 பில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளது.

நாட்டின் மின்னுற்பத்திக்கான கேள்விக்கு அமைய மின்னுற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்படவில்லை. சம்பூர் அனல் மின்நிலையத்தை உருவாக்குவதற்கு எடுத்த தீர்மானத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் உயர் நீதிமன்றம் சென்றார்கள். இதனால் சம்பூர் அனல் மின்நிலைய திட்டம் கைவிடப்பட்டது. இதனால் மின்சார சபை வருடாந்தம் 95 பில்லியன் ரூபாவைவருடாந்தம்மேலதிகமாகச் செலவிட்டது.

அதனைப் போல் உமா ஓயா திட்டத்துக்கு எதிராக பண்டாரவெல மற்றும் ஊவா வெல்லச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதனால் 9 பில்லியன் ரூபா தாமத கட்டணத்தை செலுத்த நேரிட்டது. மின்வலுத்துறை தொடர்பில் எடுத்த தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் அனைவரும் இன்றைய நிலைக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

நிறைவடைந்த 10 மாத காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை 60 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளதாக எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார குறிப்பிட்டுள்ளமை அடிப்படையற்றது. மின்சார சபை கடந்த 9 மாத காலப்பகுதியில் மாத்திரம் 12 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. மின்சார சபை இலாபமடையுமாக இருந்தால் அதன் பயனை நாட்டு மக்களுக்குநிச்சயம்வழங்குவோம்.

மின்சாரசபையின்செலவுகளை குறைப்பதற்குஉரியநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நான் அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் மின்சார சபையின் ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் வழங்குவதை நிறுத்தினேன். அத்துடன்வருடாந்தம் வழங்கப்படும் 25 சதவீத சம்பள அதிகரிப்பை இரத்து செய்தேன்.

நாட்டின் சக்தி வலுத்துறையை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அம்பாந்தோட்டை பகுதியில் அடுத்த மாதம் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்படும். இதனால் பலருக்குத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்பெறும். அத்துடன் அடுத்த மாதம்மன்னார்மாவட்டத்தில்அதானி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கவுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையம், பூநகரி மின்னுற்பத்தி திட்டம், சம்பூர் அனல் மின்நிலைய திட்டம்,மட்டக்களப்பு ஒட்டமாவடி பகுதியில் மின்னுற்பத்தி திட்டம் உள்ளிட்ட ஆறு மின்னுற்பத்தி திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்றார்.

## வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். அவரது இறப்புக்கு அவர் பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப் பட்டதே காரணம் என்று அவரது உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த நிலையில் அலெக்ஸின் இறப்புத் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று இடம்பெற்றது. அலெக்ஸின் இறப்பு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் நிகழ்ந்திருப்பதால் விசாரணைகள் இங்கேயே முன்னெடுக் கப்பட்டன.

வழக்கு விசாரணையின்போது அலெக்ஸ் தரப்பில் வடக்கு மாகாணம் முழுவதும் இருந்து 30க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் மன்றில் முற்பட்டிருந்தனர்.

நேற்றைய விசாரணைகளின்போது, அலெக்ஸுடன் கைது செய்யப்பட்ட மற்றொரு சந்தேகநபர் சாட்சியமளித்தார். பொலிஸாரால் தாங்கள் இருவரும் கைது செய்யப்பட்டு தாக்கப் பட்டனர் என்று அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார். தம்மைத் தாக்கிய 5 பொலிஸாரின் அங்க அடையாளங்களையும் அவர் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தினார். வட்டுக் கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் அன்று வேறொரு இடத்தில் வைத்தே தாம் தாக்கப் பட்டனர் என்றும் தெரி வித்தார்.

நேற்று சாட்சியமளித்த யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மயூரதன், கடுமையாகத் தாக்கப்பட்டதனால் சிறுநீரகம் செயலிழந்து போனமையே அலெக்ஸின் இறப்புக்கான காரணம் என்று சாட்சியமளித்திருந்தார்.

இவற்றையடுத்து சந்தேக நபர்களான 5 பொலிஸாரையும் -கைதுசெய்துநீதிமன்றில்முற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணை குறித்து சட்டத்தரணி என். சிறீகாந்தா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இதுவரை நடைபெற்ற இறப்பு விசாரணையின் அடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் சில கட்டளைகளை வழங்கியுள்ளார். இன்றைய தினம் சாட்சி வழங்கிய 5 பேரில் மூன்றாம் சாட்சியாக இருந்தவர் இறந்தவருடன் தானும் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தார் என்று கூறியிருக்கிறார். அந்தச் சாட்சி பெயர் குறிப்பிட்ட இரண்டு பொலிஸாரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகருக்கு மன்று கட்டளையிட்டது.

தாங்கள் இருவரும் பொலிஸ் நிலையத்திற்கு வெளியில் வைத்தே தாக்கப்பட்டனர் என்று சாட்சி கூறியதையடுத்து, குறித்த இடங்களை அறிவியல் ரீதியாக அடையாளம் காண சாட்சியை அழைத்து செல்ல உதவி பொலிஸ் அத்தியட்சகர் நீதிவானின் அனுமதியைக் கோரினார். அதற்கு அனுமதியளித்துக் கட்டளையிட்ட நீதிவான் சாட்சியின் பாதுகாப்புக் கருதி இரண்டு சட்டத்தரணிகளும் உடன் செல்ல அனுமதியளித்தார்.

சாட்சியால்விவரமாகக்கூறப்பட்ட மேலும்மூன்றுபொலிஸாரின்அங்க அடையாளங்களைவைத்துமேலும் மூன்று பொலிஸ் சந்தேகநபர்கள் பற்றிய விவரங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி மயூதரன் காயத்தை விபரித்ததோடு காயம் காரணமாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டதே இறப்புக்கான முதன்மைக் காரணம் என்று கூறியிருந்தார். அதன் அடிப்படையில் அடிப்படையில் இந்தச் சம்பவம் ஒரு மனித உயிர் போக்கல் அல்லது ஆட்கொலை என்கிற தீர்மானத்திற்கு நீதிமன்றம் வந்துள்ளது.

சந்தேகநபர்களான பொலிஸார் நாட்டைவிட்டு வெளியேற முடியாத வகையில் பயணத் தடைகளை விதிக்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமது விசாரணையில் நான்கு பொலிஸார் இந்தச் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் என்று ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று உதவி பொலிஸ்அத்தியட்சகர்நீதிமன்றத்தில் தெரிவித்தார்,

நீதிமன்றநடவடிக்கைகள்மூலம் இந்த இறப்புத் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும் என்றநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது - என்றார்.

விசாரணை தொடர்ந்து விரைவாக இடம்பெற ஏதுவாக வழக்கு விசாரணை நவம்பர் 27 அன்று ஒத்திவைக்கப்பட்டது.

## அங்கத்துவம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத் தலைப்புகளுக்கு மேலதிகமாக அமைச்சரவை அங்கத்துவம் அல்லாத பெருந்தோட்டத்தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சின் செலவுத் தலைப்பும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





## அடுத்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்-டுள்ளதாவது:

இந்த ஆசிரியர்கள் தற்போது மாகாண மட்டத்தில் பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர். கஷ்டப்புற பாடசாலைகளில் தற்போது கடமையாற்றும் அதிபர்களுக்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி நிர்வாகத்தில் உள்ள வெற்றிடங்கள் விரைவில் முழுமைப்படுத்தப்படும். கல்வி நிர்வாகத்தில் 808 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தற்போது பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன். 404 பேருக்கு மிக விரைவில் நியமனங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் கீழ் நாடு முழுவதும் 1,250 கொத்தணிப் பாடசாலைகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக அருகில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் ஒரு குழுவாகச் செயற்படும்.

குறிப்பாக மொனராகலை போன்ற மாவட்டங்களில் இவ்வாறான தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் காணப்படுகின்றன. அந்தப் பாடசாலைகளை பராமரிக்கும் வசதி பெற்றோர்களுக்கு இல்லை. ஆனால் வரவிருக்கும் கல்விச் சீர்திருத்தங்களின் கீழ், கொத்தணிக்குள் உள்ள பாடசாலைகள் அதில் உள்ள ஏனைய பாடசாலைகளினால் கண்காணிக்கப்படும் முறை அமைக்கப்படும். அதன் பின்னர் பாடசாலைகளுக்கு இடையே வளங்கள்; பிரிந்து செல்லும் என்றார்.

## அரசமைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ததாவது:

சபாநாயகர் நீங்களும் நானும் சபையில் இல்லாதபோது சபைக்கு வந்த ஜனாதிபதி அரசமைப்புப் பேரவை தொடர்பாகப் பல விடயங்களை முன்வைத்துள்ளார். குறிப்பாக அரசமைப்புப் பேரவையின் இறுதி நியமனத்தை மேற்கொள்ளாமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரை சாடி ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார், இந்நியமனம் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பது அரசமைப்பின் 41 (ஏ) உறுப்புரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்புப் பேரவைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பெயரைப் பரிந்துரைத்துள்ளது. ஏன் இந்நியமனத்தை மேற்கொள்ளவில்லை என நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் வினவியுள்ளேன். இறுதி நியமனம் தொடர்பான பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லை.

அத்துடன் நாங்கள் சபையில் இல்லாதபோது அரசமைப்புப் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாக தேடிப்பார்க்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஜனாதிபதிக்கு அவ்வாறு செயற்பட அதிகாரம் இல்லை.

நிறைவேற்று அதிகாரத்தின் அதிகாரங்களை ஓரளவிற்கு குறைக்கும் வகையில் தடைகள் மற்றும் சமன்பாடுகளை ஏற்படுத்தவே அரசமைப்பு பேரவை அமைக்கப்பட்டது.

அவ்வாறு இல்லாமல் ஜனாதிபதி பெயரிட்டு அனுப்பும் அனைத்துக்கும் "ஆம்" எனத் தலையாட்ட முடியாது. பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசமைப்பு பேரவை தெளிவாக ஜனாதிபதிக்குத் தெரிவித்திருக்கிறோம். எனவே அரசமைப்புப் பேரவைக்கான இறுதி நியமனம் தொடர்பில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்கான காரணம் என்ன என்பதை ஜனாதிபதிக்கு தெறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் இது தொடர்பாக நாட்டுக்கு தவறான தகவல் செல்லும் என்றார்.




# வடக்கு, கிழக்கில் 6 ஆயிரம் பொலிஸாரை கடமையிலீடுபடுத்துவதற்கு நடவடிக்கை

## நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்



வடக்கு, கிழக்கில் தமிழ் மொழியில் சேவையாற்றக் கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கான பயிற்சிகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் இடையில் பல்வேறு காரணங்களால் அது சற்று மந்த நிலையிலேயே காணப்பட்டது என நீதி, அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் சேவையாற்றக்கூடிய 6000 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மொழி பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் மூலம் தமிழ் மொழியில் சேவையாற்ற கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்கள்களுக்கான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய டளஸ் அழகப்பெரும எம். பி அது தொடர்பில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

டளஸ் அழகப்பெரும எம்.பி தமது கேள்வியின் போது -

வடக்கு கிழக்கில் தமிழை தமது தாய் மொழியாகக் கொண்ட மக்கள் பொலிஸ் நிலையங்களில் தமது தாய் மொழியில் முறைப்பாடுகளை முன்வைக்க முடியாமல் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

தமது தாய் மொழியில் வாக்குமூலங்களை பதிவு செய்து கொள்வதற்கும் முடியாத நிலையே அங்கு காணப்படுகிறது. இவ்வாறான விடயங்கள் சில வேளைகளில் இனப் பிரச்சினைக்கான காரணமாகவும் அமைந்து விடுகின்றன. இது அநீதியான ஒரு விடயமாகும்.

மக்கள் தமது தாய் மொழியில் முறைப்பாடுகளை அல்லது வாக்குமூலங்களை வழங்க முடியாத நிலை மிகவும் துரதிஷ்டமானது.

நாட்டில் 85,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ள நிலையில் அவர்களின் ஒரு வீதமாவது இவ்வாறு தமிழ் மொழியில் செயற்படக்கூடிய உத்தியோகத்தர்கள் கிடையாது. அந்த வகையில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் துறையில் நியமித்துக் கொள்வது தொடர்பான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது அவசியம். - என்றார்.

(05)

# மட்டு. பொலிஸாருக்கு எதிராக மக்கள் முன்னணி முறைப்பாடு

## மனித உரிமை ஆணைக்குழுவில்





மட்டக்களப்பு தாண்டியடி மற்றும் தரவை மாவீர் துயிலும் இல்லங்களில் துப்புரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் கட்சி ஆதரவாளர் தரணி ஆகியோரை பொலிஸார் வியாழக்கிழமை சேட்டை பிடித்து துப்புரவு பணியை செய்யவிடாது அச்சுறுத்தல் செய்த பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் 26 ஆம் திகதி மாவீரர் தினத்தையிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஆதரவுடன் மக்கள் வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள தாண்டியடி மாவீர் துயிலும் இல்லத்தைத் துப்புரவு பணியில் ஈடுபட்டு சம்பவதினமான வியாழக்கிழமை மேற்கொண்டிருந்தனர். அதன்போது அங்கு சென்ற வவுணதீவு பொலிஸார் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாள் த.சுரேஸை துப்புரவுப் பணியை மேற்கொள்ளவிடாது அச்சுறுத்தியுள்ளனர்.

இதனால் அவர்கள் தொடர்ந்து துப்புரவுப் பணியை செய்ய முடியாது அங்கிருந்து வெளியேறினர் அதேவேளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தரவை மாவீர் துயிலும் இல்லத்தில் பொது மக்கள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு சென்ற வாழைச்சேனை பொலிஸார் அவர்களை அச்சுறுத்தியதுடன் தரணி என்ற இளைஞனின் சேட்டை பிடித்து இழுத்து கையடக்க தொலைபேசியை பறித்து அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த இரு பொலிஸ் நிலைய பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு எதிராக நீதி கோரி மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவிடம் பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு உள்ளான இருவரும் முறைப்பாடு செய்துள்ளனர். (05)

# மட்டக்களப்பில் பழரசம் விற்றவருக்கு அபராதம்

மட்டக்களப்பில் அதிகளவான இரசாயன பதார்த்தங்களைக் கலந்து பழரசங்களை விற்பனை செய்து வந்த உற்பத்தியாளருக்கும், விற்பனை முகவருக்கும் எதிராக 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த பழரசத்தைப் பருகிய சிலர் அதில் கசப்புத் தன்மை இருப்பதாக பொது சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து பொது சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையை அடுத்தே குறித்த பழரசத்தில் அளவுக்கு அதிகமான இரசாயனப் பதார்த்தங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்த போதே விற்பனையாளருக்கும், விற்பனை முகவருக்கும் நீதிமன்றம் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது. (05)

# பொலிஸ் உத்தியோகஸ்தரின் மோட்டார் சைக்கிள் தீக்கிரை

## மருதங்கேணியில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

மருதங்கேணி நித்தியவெட்டை பகுதிக்கு கடமை நிமித்தம் தனது மோட்டார் சைக்கிளில் சென்று, மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்தி விட்டு, வீடொன்றில் விசாரணை நடவடிக்கையை மேற்கொண்டபோது, வீதியில் நின்ற மோட்டார் சைக்கிளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

தீ வைத்தவர்கள் தப்பிச் சென்ற நிலையில் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# இலங்கை பெண்களின் ஆயுட்காலம் அதிகரிப்பு

*இலங்கையில் பெண்களின் ஆயுட்காலம் 80 வருடங்களாக அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, இலங்கையில் தற்போது பெண்களின் ஆயுட்காளம் சராசரியாக 76%77 வருடங்கள் எனக் கூறியுள்ளார்.*

*கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளதுடன், சிசு இறப்பு வீதம் ஆயிரத்துக்கு 6 ஆகவும் தாய் இறப்பு வீதம் 100,000 துக்கு 28 ஆகவும் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.*

*அத்துடன், இந்த நிலைமை ஐக்கிய இராச்சியத்தின் நிலைமையைப் போன்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.*

*(05)*

# பாணந்துறையில் வர்த்தகர் ஒருவரை கத்தியால் குத்தி வீட்டில் கொள்ளை

பாணந்துறை பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் வீட்டிற்குள் இரண்டு நபர்கள் நுழைந்து அவரை கத்தியால் குத்தி காயப்படுத்தி தங்க நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளனர் என பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை அதிகாலை 2 மணி அளவில் இடம் பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட வர்த்தகரின் மனைவி அளித்த புகாரில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காயமடைந்த வர்த்தகர் பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சந்தேகநபரை துரத்தி சென்று மாயமான பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தார்



சந்தேக நபரை துரத்திச் சென்ற போது காணமல்போன பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார்.

வியாழக்கிழமை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மேலும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் ஜா-எல பகுதியில் நீரோடை மூலம் தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை துரத்திச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி தற்போது ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்தவர் ஆவார்.

(05)

# யாழில் மாவீரர் நினைவேந்தலுக்கு தேவையான பொருள்கள் சேகரிப்பு

மாவீரர் தினத்தில் தமிழ் மக்களின் கூட்டுணர்வையும் கூட்டுரிமையையும் வெளிப்படுத்தும் வகையில் நினைவேந்தலுக்குத் தேவையான பொருள்களைச் சேகரிப்பதற்கான கூடம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொருள்களை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சேகரிப்பு கூடத்தில் வழங்க முடியும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நினைவேந்தலுக்குத் தேவையான கற்பூரம், எண்ணெய், சுட்டி, திரி என்பவற்றை நவம்பர் 27 ஆம் திகதி வரை தினமும் குறித்த சேமிப்புக்கூடத்தில் வழங்க முடியுமெனவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# முல்லைத்தீவு மீனவர்கள் கவனவீர்ப்பு போராட்டம்




முல்லைத்தீவு கடல் தொழிலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று (வெள்ளிக்கிழமை) கவனவீர்ப்பு போராட்டமொன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

வடமாகாண கடற்பரப்பில் இந்திய மீனவர்களுடைய அத்துமீறிய பிரவேசம் காணப்படுவதாகவும் இதனால் தமது தொழில்நடவடிக்கைகள்பாதிக்கப்படுகின்றன எனவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன்நாடாளுமன்றஉறுப்பினர்கள் இந்தியாவிற்கு சென்று மீனவர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கதைப்பதில்லை எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் யாழ் மாவட்ட மீனவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

போராட்டத்தின் நிறைவின்போது முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதி மற்றும் கடல் தொழில் அமைச்சர் உள்ளிட்டோருக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது. மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகத் தாம் அறிந்துள்ளதாகவும் இது தொடர்பாக உரிய தரப்புகளுக்கு தெரியப்படுத்துவதாகவும் இந்த மகஜர்களை உரியவர்களுக்கு அனுப்பி வைப்பதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்தபோராட்டத்தில்சுமார்70மீனவர்க் கலந்து கொண்டு தங்களின் எதிர்ப்பை வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# கலேவெலவில் விபத்து யுவதி பரிதாபச் சாவு



கலேவெல பிரதேசத்தில் ஓட்டோவுடன் தார் ஏற்றிச் சென்ற பவுஸர் ஒன்று மோதி இடம்பெற்ற விபத்தில் ஓட்டோவில் பயணித்த யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என கலேவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலேவெல நகரில், தாய், தந்தை மற்றும் இரண்டு மகள்கள் பயணித்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதுண்டதோடு, தார் ஏற்றிச் சென்ற பவுஸர் வாகனத்துடனும் மோதியுள்ளது.

தெஹியத்தகண்டிய சிறிபுர பிரதேசத்தில் இருந்து குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது ஓட்டோவுக்குள் இருந்த யுவதி தூக்கி வீசப்பட்டு தார் ஏற்றிச் சென்ற வானத்தின் டயரில் சிக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், இதில் படுகாயமடைந்த தாய், தந்தை மற்றும் அவர்களின் இன்னொரு மகள் தம்புள்ளை மற்றும் கலேவெல வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறிபுர பகுதியைச் சேர்ந்த லோச்சனா காவ்யாஞ்சலி என்ற 19 வயது இளம்பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், நேற்று இவரது 20 ஆவது பிறந்தநாள் என உறவினர்கள் தெரிவித்தனர்.

விபத்தையடுத்து வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கெப்பின் சாரதி மற்றும் தார் ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# தூக்குத் தண்டனை கைதிக்கு மன்னிப்பு வழங்க கோரிக்கை

தூக்குத் தண்டனையை ஏதிர்நோக்கியுள்ள 2 பிள்ளைகளின்தாயானசெ.சத்தியலீலாவதிக்கு பொதுமன்னிப்பை பெற்றுக் கொடுக்க உதவுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்த கோரிக்கைக் கடிதம் நேற்று (வெள்ளிக்கிழமை) குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலா என்பவர் 14 ஆண்டு காலம் தமிழ் அரசியல் கைதியாக வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல்நீதிமன்றத்தினூடாக விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேல்முறையீடு காரணமாக இப்பெண்மணி மீண்டும் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ளார்.

அதாவது, 2004ஆம்ஆண்டுஇடம்பெற்ற, அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மீதான குண்டுத்தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் முன்பள்ளி ஆசிரியையான குடும்பத் தலைவி செ.சத்தியலீலா என்பவர் அவசரகாலச் சட்டவிதியின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர், சுமார் 14 ஆண்டுகள் இருந்தபடி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து கடந்த ஜனவரி 14, 2018 அன்று கொழும்பு மேல் நீதி மன்றால் '15வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழிய சிறைத்தண்டனையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த வேண்டும்.' என்கின்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மேல்நீதிமன்றம் வழங்கிய இவ்வழக்குத் தீர்ப்பில் திருப்தியுறாத சட்டமா அதிபர் அதனை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். அதற்கமைய மேல்முறையீட்டு நீதிமன்றம் செ.சத்தியலீலா என்பவருக்கு ஜனவரி 23, 2023 அன்று மரணதண்டனை தீர்ப்பளித்துள்ளது.

நிரந்தர வருமானமின்மையால் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் சத்தியலீலாவால் தனக்கென ஒரு சட்டத்தரணியை அமர்த்துவதில் கூட மிகச்சிரமப்படுகிறார். இவ்வாறான நிலையில்தான் இவர், இறுதி முயற்சியாக இலங்கை உயர் நீதிமன்றத்தின் வாசலை ஏறியிருக்கிறார்.

கௌரவ ஜனாதிபதியாகிய தாங்கள், சமூகங்களுக்கிடையிலான நல்லெண்ண சமிக்கையாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட இன்னபிற விடயங்களிலும் கரிசனைகொள்வதாக நம்பப்படுகிறது. இதேநேரம், அரச இயந்திரங்களின் செயற்பாடுகளோ முற்றிலும் மாறாக இருப்பது கவலையளிக்கிறது.

இவ்வழக்குடன் சம்பந்தபட்ட அமைச்சர் டக்ளஸ;தேவானந்தா அவர்கள், சந்தேகநபரான 'செ.சத்தியலீலாவை வழக்கிலிருந்து விடுவிப்பது தொடர்பில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை' என்று, திறந்த மேல் நீதிமன்றத்தில் வெளிப்படையாக தெரிவித்திருந்த நிலையிலும் கூட இப்பெண்மணி இன்றுமரணதண்டணைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

ஆகவே,'14வருடங்களாகக்குடும்பம், பிள்ளைகள், பெற்றோர், உறவுகள் என அனைவரையும் பிரிந்து சிறைக்குள் சொல்லொனா துன்பங்களை அனுபவித்துவிட்டு விடுதலையாகி வெளியில் வந்த பின்பும் ஒரு மரணதண்டணை கைதியாக மீண்டும் சிறை செல்வதை என்னால் நினைத்துப் பார்க்க முடியாது.

அதற்கு, உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்' என்ற நிலைப்பாட்டில் இருக்கும் இந்த பெண்மணிக்கு ஏதேனுமோர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் பொது மன்னிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துதவுமாறு கௌரவ ஜனாதிபதி அவர்களை, ஒரு சுயாதீன மனிதநேய அமைப்பாக நாம் கேட்டு நின்கின்றோம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# 45 கிலோ காட்டுபன்றி இறைச்சியை உண்ட பொலிஸார் பணி இடை நீக்கம்

சோதனையின் போது கைப்பற்றப்பட்ட50கிலோகாட்டுப்பன்றி இறைச்சிக்கு பதிலாக, 05 கிலோ காட்டு பன்றி இறைச்சியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எஞ்சிய 45 கிலோவை சாப்பிட்ட அக்குரஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரை பணி இடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வழக்குப்பொருள்களைத்தவறாகக் கையாளுதல்,நேர்மையற்றமுறையில் அல்லது மோசடியான முறையில் மறைத்தமை அல்லது அகற்றியமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் குறித்த அதிகாரிக்கு எதிராக மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும்பொலிஸார்நடவடிக்கை எடுத்துள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த வழக்கு அண்மையில் (21) அழைக்கப்பட்ட போது, சப்-இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் ஒரு லட்சம்ரூபாபெறுமதியானபிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த அதிகாரி திஹாகொட பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்துள்ளார். இவர் அக்குரஸ்ஸ பொலிஸ்நிலையத்தில்கடமையாற்றிய போது பன்றி இறைச்சி சோதனையில் ஈடுபட்டார். பெப்ரவரி 26 அன்று பன்றி இறைச்சி சோதனை செய்யப்பட்டது.

இந்த உத்தியோகத்தரின் இந்த மோசடிச் செயல் தொடர்பில் தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குக் கிடைத்த மனுவின் பிரகாரம், இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு தெரியவந்த தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (05)

# வவுனியாவில் விபத்து: ஒருவர் உயிரிழப்பு

வவுனியாவில் சைக்கிள் மீது கனரகவாகனமொன்று மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

வவுனியா ஏ9 வீதியில் இருந்து கோவில்குளம் நோக்கி சென்ற கனரகவாகனமே, இவ்வாறு சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் சைக்கிளில் பயணித்த முதியவர் படுகாயமடைந்தநிலையில்வவுனியாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயேசிகிச்சைபலனின்றி மரணமடைந்தார்.

இவ்விபத்துதொடர்பானமேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.11.2023இல் வெளியிடப்பெற்றது.